ஸ்ரீராமஜெயம்.

# திருவேங்கடத்தான் திவ்ய ப்ரபந்தம்.

(ஆழ்வார்கள் அருளிச்செய்தது).

வேலூர் ஸ்ரீமகந்து ஹைஸ்கூல் ஆசிரியர்
S. ஸ்ரீநிவாசய்யர், B.A., L.T., M.R.A.S.,
அவர்களால்,

வேலூர்
ரிகார்ட் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1931

காபிரைட்] [விலை 0—4—0

# பதிப்புரை.

திருவேங்கடம் அல்லது வேங்கடம் என்பது சென்னைக்கு வட மேற்கே சுமார் 90 மைல் தூரத்திலுள்ள திருப்பதி என்னும் பட்டணத்திற்கு அருகாமையில் மலைமேல் 7 மைல் தூரத்திலிருக்கும் ஒரு திவ்விய க்ஷேத்திரமாகும். இத்தலத்தையடையவேண்டுமானால் ரேணுகுண்டா, காட்பாடி என்னும் இரண்டு சந்திப்புகளையும் சேர்க்கும் கிளை இருப்புப்பாதையில் திருப்பதி கிழக்கு என்னும் ரயில் ஸ்டேஷனில் இறங்கவேண்டும். திருப்பதி பட்டணமானது ரயில் ஸ்டேஷனுக்கு அருகே உள்ளது; இதைக் கீழ்திருப்பதி என்றும் சொல்வதுண்டு. இவ்விடத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்குப் பல சத்திரங்கள் இருக்கின்றன. இப்பட்டணத்தில் கோவிந்தராஜ ஸ்வாமிக்கும் கோதண்டராம ஸ்வாமிக்கும் சிறந்த கோயில்கள் உண்டு. இப்பட்டணத்திற்கு வடக்கே சுமார் 1½-மைல் தூரத்தில் கபிலதீர்த்தம் அல்லது ஆழ்வார் தீர்த்தம் என்னும் மலையினின்று விழும் நீர்வீழ்ச்சியால் உண்டாக்கப்பெற்ற ஒரு பொய்கையும், அதன் கரையில் கபிலேசுவரருடைய ஆலயமும் இருக்கின்றன. யாத்ரீகர்கள் மலை ஏறுவதற்கு முன் இக்குளத்தில் நீராடிப்போவது வழக்கம். திருப்பதி பட்டணத்திற்கு சுமார் 3 மைல் தூரத்தில் பத்மாவதி அம்மையார் அல்லது அலர்மேல் மங்கைத்தாயார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருச்சானூர் (திருச்சுகனூர்) என்னும் திவ்ய க்ஷேத்ரமும் இருக்கின்றது. யாத்ரீகர்கள் திருவேங்கடத்தானைத் தரிசித்ததும் திருச்சானூரையடைந்து அவர் தம் நாயகியார் ஆகிய அலர்மேல் மங்கைத்தாயாரையும் தொழுதுபோவது வழக்கம். திருப்பதி கிழக்கு என்ற ரயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் 2 மைல் சென்றால் திருவேங்கட மலையின் அடிவாரத்தையடையலாம். இங்கிருந்து மலை ஏற ஆரம்பித்து மலைமீது ஏழுமைல் கடந்தால் திருவேங்கடத்தான் திருக்கோயிலையடையலாம். திருக்கோயில் இருக்கும் மலைக்கே வேங்கடாசலம் என்று பெயர்; இது திருமலை என்றும் வழங்கப்படுகிறது. திருக்கோயிலைச் சுற்றியுள்ள சிறிய ஊரை, திருமலை என்றும் மேல் திருப்பதி என்றும் சொல்வதுண்டு. மற்றைய ஆறு மலைகளும் விருஷபாத்ரி, கருடாத்ரி, ஸிம்ஹாத்ரி, அஞ்ஜனாத்ரி, சேஷாத்ரி,

நாராயணாத்ரி என்னும் பெயருடையன. இம்மலைகளில் முதன்மலை செங்குத்தாயிருப்பதனால் ஏறுகின்றவர்களுக்குச்சற்று சிரமத்தை யுண்டுபண்ணும். ஆனாலும் படிகள் செவ்வனே அமைக்கப்பட்டிருக் கின்றன. அம்மலையின் உச்சியில் காளிகோபுர மென்னும் கோபுர மொன்று உளது. மற்றைய மலைகளைச் சுலபமாகக் கடக்கலாம். ஆறுவது மலையும் சற்றுச் செங்குத்தாகவே இருக்கிறது. வயோதி கர்களும் வலியற்றவர்களும் நடக்கமுடியாவிட்டால் டோலி என்னும் ஆட்களால் தூக்கிச் செல்லப்படும் தொட்டில்களில் ஏறிச்செல்லலாம்.

இம்மலைமேல் திருக்கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் எம்பெருமானுக்கு, திருவேங்கடத்தான், வெங்கடாசலபதி, வெங்க டேசுவரர், ஸ்ரீநிவாஸமூர்த்தி, கோவிந்தன், பாலாஜி என்ற பலபெயர் கள் உண்டு. திருக்கோயில் மிகவும் அழகமைந்தது. தங்கக்கலசத் துடன் கூடிய கோபுரங்களும் பற்பல சித்திர வேலைப்பாடுகளமைந்த மதிற் சுவர்களும் உடையது. வெங்கடேசப்பெருமான் இக்கலியுகத் தில் ஹிந்துக்கள் அனைவராலும் பிரத்தியக்ஷ தெய்வமாகப் போற்றப் படுகின்றனர். யாத்ரீகர்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி எம்பெருமா னைத் தொழுதுகொண்டிருப்பதை எந்நாளும் காணலாம். ஆச்வயுஜ மாஸத்தில் (செப்டம்பர் அக்டோபர்) பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப் பாக நடைபெறும். அச்சமயம் யாத்ரீகர்களின் கூட்டம் அதிகமா யிருக்கும். இந்த உத்ஸவம் அநேகமாய் நவராத்ரியுடன் கலந்து நடக்கும். எம்பெருமானுக்குத் தினந்தோறும் அநேகமுறை பூஜை கள் நடந்து வருகின்றன. பகல் 12-மணிக்குத் தர்மதர்சனம் என் னும் சமயத்தில் யாத்ரீகர்கள் யாவரும் யாதொரு கட்டணமுமின்றி எம்பெருமானைச் சேவிக்கலாம். திருக்கோயிலின் அருகாமையில் ஸ்வாமி புஷ்கரணி அல்லது வராஹ புஷ்கரணி என்னும் திவ்ய தீர்த்தமிருக்கிறது. யாத்ரீகர்கள் இத்திருக்குளத்தில் நீராடினபிறகே எம்பெருமானைத் தரிசிப்பர். இப்பொய்கையின் வடக்குக்கரையில் ஸ்ரீ வராகமூர்த்திக்கு ஒரு சிறிய கோயிலும் உண்டு. இந்தத்தீர்த்தம் தவிர, திருமலையின்மேல் ஆகாசகங்கை, பாபவிநாசம் என்னும் பல தீர்த்தங்களும் உண்டு. கோயிலைச்சுற்றிலும் யாத்ரீகர்கள் தங்குவ தற்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றன. தேவஸ்தான அதிகாரிகள் யாத்ரீகர்கள் எல்லோருக்கும் பிரசாதம் தினந்தோறும் வழங்குகின்ற னர்; யாத்ரீகர் சௌகரியத்திற்காகத் திருமலையில் ஆங்கிலமுறை ஆஸ்பத்திரி ஒன்றும தேவஸ்தானத்தாரால் நடத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் திருக்கோயிலையும், திருப்பதி, திருச்சானூர் முதலிய இடங்களில் உள்ள பல கோயில்களையும், திருப்பதியிலுள்ள ஸ்ரீ ஸ்வாமி ஹத்தீராம்ஜீ மடத்து அதிபதியாகிய விராகி சக்ரவர்த்தி ஸ்ரீ மகந்து பிரயாகதாஸ்ஜீ அவர்கள் விசாரணைகர்த்தராயிருந்து பரிபாலித்து வருகிறார்.

இவ்வளவு சீரும் சிறப்பும் புகழும் புண்ணியமும் வாய்ந்த எம் பெருமான் திருவேங்கடத்தான் திருக்கோயில் ஆதிகாலந்தொட்டே பிரசித்தி அடைந்திருக்கிறது. பாணினிக்கு முன்பாக, தமிழுக்கு இலக்கணம் வகுத்தருளிய தொல்காப்பியனாரும்

‘ வடவேங்கடந் தென்குமரியாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம். ’

என்று வேங்கடத்தைத் தமிழ்நாட்டுக்கு வடவெல்லையாகக் குறிப்பிட்டிருக்கிறார். இத்திருப்பதியின் மகிமையும், பெருமையும், தொன்மையும் ப்ரஹ்மாண்ட புராணத்திலும், பவிஷ்யோத்தர புராணத்திலும், வராக புராணத்திலும், மிகவும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. தன்னையடைந்தவர் பாவமனைத்தையும் ஒழிப்பதனாலும், தன்னையடைந்தவர்க்கு அழிவில்லாத ஐசுவரியங்களைத்தருதலாலும் இம்மலை ‘ வேங்கடம் ’ என்னும் பெயர் கொண்டது என்று புராணங்கள் கூறுகின்றன ; இவ்வுண்மைகளை விளக்கப் பலசரிதங்களும் அப்புராணங்களில் அடங்கியிருக்கின்றன.

புராணகாலத்துக்குச் சற்றேறக்குறைய தமிழ்நாட்டில் இயற்றப் பெற்ற தமிழ் மொழியின் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் திருவேங்கடத்தானையும், அவன் தன் மலையையும் அடியில் கண்டவாறு வர்ணிக்கிறது :—

“ வீங்கு நீரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத்துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங்கோங்கிய விடைநிலைத்தானத்து
மின்னுக்கொடியுடுத்து விளங்குவிற்பூண்டு
நன்னிறமேக நின்றதுபோலப்

பகையணங்காழியும் பால் வெண்சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிள ராரமார் பிற்பூண்டு
பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கணெடியோன் நின்ற வண்ணமும்"

[காடுகாண் காதை 41-51]

தென்னாட்டிலே ஆதிநாளிலே வைஷ்ணவ மதத்தைப் பரவச் செய்த சமயாசாரியர்களுள் ஆழ்வார்கள் பன்னிருவரே முதன்மை யானவர். இப்பூவுலகின்கண் ஆன்மகோடிகள் உய்யும்பொருட்டு அர்ச்சாவதாரமாய் நூற்றெட்டுத் திருப்பதிகளில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திவ்ய குணங்களைப் பன்னிரு ஆழ்வார்களும் திருப்பாசுரங்களால் போற்றி இருக்கின்றனர். அப்பாசுரங்களின் தொகை சற்றேறக்குறைய நாலாயிரமாகும்; அவைகளின் தொகுதியே நாலாயிர திவ்யப்ரபந்தமென வழங்கப் படுகிறது. அமிர்தக்கடலாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் எம்பெருமான் திருவேங்கடத்தானது திவ்யகுணங்களைப் போற்றும் பாக்களைப் பொறுக்கி அவனது அடியார்க்கு உதவவேண்டுமென்னும் எண்ணத்துடனேயே இச்சிறு புத்தகம் பதிக்கப்பட்டதாகும். திருவேங்கடத்தானைப்பற்றியுள்ள பாசுரங்களைக் கூடியவரையில் பொறுக்கித் திரட்டியுள்ளேன்; விட்டுப்போனவைகள் இருக்கலாம்; அவைகளை அன்பர்கள் அறிவிப்பார்களாயின் அடுத்த பதிப்பில் அவைகளைச் சேர்த்துக்கொள்வதுடன் அவ்வன்பர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு பாசுரமும் நாலாயிரத்தொகுதியில் எந்த பிரிவில் எந்த இடத்தில் இருக்கிறதென்பதும் ஆங்காங்கு காட்டப்பட்டிருக்கிறது; அனைவரும் எளிதிற்பொருள் உணர்ந்துகொள்வதற்காக அரும்பதவுரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் மதுரகவியாழ்வாரும் தவிர மற்றைய பதின்மரும் தம் பிரபந்தங்களில் திருவேங்கடத்தானைப்போற்றி யிருக்கின்றனர். அப்பதின்மர் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், நம்மாழ்வார் ஆவர். இவ்வரிசை தத்கால சரித்திர

ஆராய்ச்சிக்காரர்களால் ஆழ்வார்களின் காலவரையை அநுசரித்துக் கொள்ளப்பட்டதாகும்; அதேவரிசையில் அவர்களது பிரபந்தங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆழ்வார்கள் சரிதையைக் கூறப்புகின் மிகப்பெருகுமாதலால் கூறாது விடுகின்றனம். இவர்கள் ஒவ்வொரு வரும் திருமாலின் ஓர் அம்சத்தின் அவதாரமென்றும் அதிக மகிமை யும் பெருமையும் வாய்ந்தவர்களென்றும் எல்லோராலும் கருதப்படு கின்றனர். அவர்களது பக்திக்கும், அவர் தம் பக்தியால் எம்பெரு மானை அவர்கள் அடைந்ததற்கும் அவர் தம் பாசுரங்களே சான்றா கும். அப்பாசுரங்களைத் திருவேங்கடத்தானுடைய பக்தர்கள் ஒவ் வொருவரும் படித்துக் களித்து அவனது பேரின்பக்கடலில் ஆழ்ந்து அநுபவிக்கவேண்டுமென்பதே இச்சிறு புத்தகத்தின் நோக்கம்.

இப்புத்தகத்தில் பாசுரங்களைத் தொகுப்பதிலும், அச்சேற்று வதிலும் எனக்குப்பலவித உதவிகளைச்செய்த எனது ஆப்தநண்பரும் என்னுடன்கூட கலாசாலையில் உழைக்கும் தமிழ்ப்பண்டிதருமான ம-া-া-ஸ்ரீ வித்வான் K. S. விசுவநாத சாஸ்திரிகள் அவர்களிடத்து மிக்க நன்றியறிவுடையேன்.

இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவர்க்கும் எம்பெருமான் திருவேங்கடத்தான் எல்லாவித இன்பங்களையும் அளிக்குமாறு வேண்டுகின்றேன்.

“அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு”

வேலூர்.
22—4—31. } பதிப்பாசிரியன்.

# அரும்பதவுரை.

பக்கம்

1.

வைகல் - தினந்தோறும்
சுடர் - தீ
நந்துவிக்கும் - ஒழிக்கும்
புனல் - தண்ணீர்
மால் - திருமால், மயக்கம்
உகந்த - விரும்பிய
இடத்தல் - பிளத்தல்
ஓதம் - அலை
பகழி - அம்பு
வெருவி - அஞ்சி
புனம் - கொல்லை
மீன் - நக்ஷத்திரம்

2

ஊழி - யுகம்
விண்ணகர் - வைகுண்டப்பெருமாள் ஸந்நதி, காஞ்சீபுரம்
வெஃகா - யதோக்தகாரி காஞ்சீபுரம்
அஃகாத - குறையாத
கோவல் - திருக்கோவலூர்
இடர் - துன்பம்
பாரசி - த்வாதசி
தொடையல் - பூமாலை
மாசூணும் - அழுக்கடையும்
வரை - மலை
ஓர் - நினை
வேய் - மூங்கில்

3

மா - குதிரை வடிவமாக வந்த கேசி
அலங்கல் - மாலை
பிறங்கு - விளங்கும்
இறுமாவார் - கர்வப்படாதவராவர்
பயின்று - பழகி
குழல் - கூந்தல்
வெற்பு - மலை
வான்கலந்த - மேக நிறத்தையுடைய

4

நிற்பு - நிற்கின்ற இடம்
உள்ளினேன் - நினைத்தேன்
நொய்விது - அற்பமானது
வெஃகுக்கை - காஞ்சீபுரத்திலுள்ள ஜகந்நாதப் பெருமாள் ஸந்நதி
பாடகம் - காஞ்சீபுரத்திலுள்ள பாண்டவதூதர் ஸந்நதி
ஒசித்த - முறித்த

5

பிடி - பெண்யானை
பொருது - போர்செய்து
சிலாதலம் - கற்பாறை
கடுவனை - ஆண்குரங்கை
கடிகை - சோளங்கிபுரம்
குடங்கை - உள்ளங்கை
கார்த்த - கரியதாகச்செய்த

6

மல் - மல்லர்கள்
விண்ட - மலர்ந்த
விறல் - வெற்றி
களிறு - ஆண்யானை
குழ - இளமை
கோள் - நக்ஷத்திரம்
குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல்
அகடு - வயிறு
பொருப்பு - மலை
ஏனம் - பன்றி
சிலம்பு - மலை

7

திருக்கூடல் - தென்மதுரை
வாரி - வாரிக்கொண்டு
நூலாட்டி - மகாலக்ஷ்மி
பேணி - விரும்பி
மங்குல் - மேகம், ஆகாயம்
கங்குல் - இரவு

8

குடங்கால் - முழங்கால்
புண்டரீகம் - தாமரை
வேடு - வேட்டைத்தொழில்
தானவர் - அரக்கர்

9

காலநேமி - ஒரு அரசன்
கொங்கு - வாசனை
புள் - பறவை (பகாசுரன்)
புராணர் - பழமையானவர்

10

பள்ளி - படுக்கை
வேள்வி - யாகம்
மாணி - பிரமசாரி

உகிர் - நகம்
திண்கைம்மா - கஜேந்திரன்
எழில் - அழகு

11

இதணம் - பரண்
கலிகன்றி - திருமங்கையாழ்வார்
விரை - வாசனை
அலத்தல் - கிலேசப்படுதல்

12

துப்பா - வலிமையுடையோனே
மஞ்சு - மேகம்
கலியன் - திருமங்கையாழ்வார்

13

விலங்கல் - மலை
குறிக்கோள் - பகுத்தறிவு
தாளம் - முத்து

14

நந்தாத - அழியாத
கானவர் - காட்டில் வசிப்பவர்
மாண்குறள் - வாமனர்
இண்டை - பூமாலை
கோவி - கோபி, ஆய்ச்சியர்

15

மட்டையர் - மொட்டையர்
தருக்கு - கர்வம்
சமண் - சமணமதம்
திரளை - கட்டி திரட்டப்பட்டது
மிடறு - தொண்டை

16

மன்று - சபை
செக - அழிய
திருவள்ளறை - திருச்சிஜில்லா
விலுள்ள ஸ்தலம்
பௌவம் - கடல்

17

முளிந்து - உலர்ந்து
மூரி - வலிமை
பரிகீறி - கேசியைக்கொன்றவர்

18

புலம் - அறிவு
கா - சோலை

19

சாழல் - தோழி
ஊரகம் - உலகளந்த பெருமாள்
கோயில், காஞ்சிபுரம்
காரகம் - கருணாகரப்பெருமாள்
கோயில், காஞ்சிபுரம்

20

உழிதருகேன் - அலைச்சற்படேன்
வித்தகன் - ஆச்சரியமான குண
சேஷ்டிதங்களையுடையவன்

21

துன்னிட்டு - நெருங்கி
வட்டில் - கிண்ணம்
தம்பகம் - தூண்
குவடு - மலையுச்சி

22

செடியாய - கூட்டமான
நமுசி - மகாபலியின் புதல்வர்

23

நிச்சலும் - தினந்தோறும்
தமனகம் - தவனம்
போதர் - வருவாய்
கோதுகலம் - மிகசந்தோஷம்

24

சதிரன் - திறமுடையோன்
ஓட்டரா - ஓட்டமாக

25

மேலாப்பு - மேற்கட்டி
தாடாளன் - முயற்சியுள்ளவன்
கதுவப்பட்டு - கவ்வப்பட்டு
அளி - கிருபை
கிளர்ந்து - விளங்கி
நடலை - வருத்தம்

26

புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூர்
கருளக்கொடி - கருடக்கொடி

27

கொந்து - கொத்து
பற்பநாபன் - பத்மநாபன்
தெழிகுரலருவி - அலை ஓசையுடன்
கூடிய அருவி

28

நிறை - நல்லகுணம்
நமன்று - வணங்கி

சமன் - ஒப்பு
வீயுமாறு - அழியுமாறு
மொய்த்த - நெருங்கிய

29

குளிப்பார் - கூத்தாடுவார்
திலதம் - நெற்றிப்பொட்டு

30

வாளி - அம்பு
சார்ங்கம் - வில்

31

இறை - கடவுள்
புகல் - அடைக்கலம்
பழனம் - வயல்
கேழ் - நிறம்
சுலாய் - சுற்றி

நான்றில - நழுவமாட்டா
எயிறு - பல்

32

ஊளி - பசி
கையறை - செயலின்மை
கீழ்து - கிழித்து

33

வெங்கண்பறவை - கருடன்
என்கும் - நெகிழும்

34

கொண்டல் - மேகம்
சிமயம் - சிகரம்
ஒண்ணுதல்லாமை - நன்றாகாமை
பாரிப்பு - மனதிற்பெருக நினைத்தல்

# பிழையும் திருத்தமும்,

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 4 | 62 | 26 |
| 3 | 13 | பன்னுள | பன்னுள். |
| 5 | 1 | ஊன் | உளன் |
| 7 | 4 | தான் | தாள் |
| 8 | 5 | புண்டரீகபாதம் | புண்டரீகப்பாதம் |
| 8 | 28 | 60 | திருச்சந்த விருத்தம்60 |
| 9 | 12 | உள்ளத்தினுயிரே | உள்ளத்தின்னுயிரே |
| 11 | 13 | மக்களென்றும | மக்களென்றும் |
| 13 | 16 | சொணு | கொணு |
| 14 | 17 | உறவொடும் | உறவொடும் |
| 14 | 18 | என்பாய்வானிடைக் | [வானிடைக் என்பாய் |
| 14 | 23 | ஆண்டு | ஆண்டுவானவர் |
| 15 | 3 | நிறைத்தெத்தும் | நிறைந்தேத்தும் |
| 17 | 1 | திருமாலை பிரியாது | திருமாலைப்பிரியாது |
| 17 | 20 | [7 ப. 3. தி. 4.] | [7 ப. 3. தி. 5,] |
| 18 | 15 | சில்ப்பிய | சிலம்பிய |
| 19 | 13 | இம்மை | இம்மையை |
| 19 | 19 | நிர் | நீர் |
| 20 | 17 | சிரார் | சீரார் |
| 22 | 2 | முறையாய் | முறையாய |
| 24 | 7 | ஜய | ஜய |
| 25 | 15 | குங்கல் | கங்குல் |
| 25 | 25 | கிளிர்ந்து | கிளர்ந்து |
| 25 | 27 | வள்ளுகிராகில் | வள்ளுகிரால் |
| 26 | 20 | (10 தி 3 ப) | (10 தி 5 ப) |
| 27 | 12 | (6 தி 0 ப) | (6 தி 10 ப) |
| 30 | 8 | அவா | ஆவா |
| 34 | 9 | ஒண்ணுதல்லாமை | ஒண்ணுதல்மாமை |
| 34 | 11 | வென் | வெண் |

# திருவேங்கடத்தான் திவ்ய ப்ரபந்தம்.

## I. பொய்கை ஆழ்வார்

### இயற்பா முதற்றிருவந்தாதி.

1. எழுவார் விடைகொள்வார் ஈன்துழாயானை
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவார்
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
மனச்சுடரைத் தூண்டும்மலை (62)

2. வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தி—திசை திசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்தவூர். (37)

3. ஊருங்வரியரவம் ஒண்குறவர் மால்யானை
பேரவெறிந்த பெருமணியை—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மென்னு மாலதிடம். (38)

4 இடந்தது பூமி எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச—கிடந்ததுவும்
நீரோதமாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோதவண்ணர் பெரிது. (39)

5. பெருவில் பகழிக் குறவர் கைச்செந்தீ
வெருவிப்புனம் துறந்தவேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டுஅஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான்குன்று. (40)

6. உணர்வாரார் உன்பெருமை ? ஊழிதோறூழி
உணர்வாரார் உன்னுருவந்தன்னை ?—உணர்வாரார் ?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்! நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால். (68)

7. வழிநின்று நின்னைத்தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரேயாவர்—பழுதொன்றும்
வாராதவண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். (76)

8. வேங்கடமும் விண்ணகரும்வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் கடந்தானே
என்றால் கெடுமாம்இடர். (77)

9. படையாரும் வாட்கண்ணார் பாரசிநாள் பைம்பூந்
தொடையலோடு ஏந்திய தூபம்—இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொருநாள்
மான்மாய வெய்தான்வரை. (82)

10. உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமனென்றும்
உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து—உளன் கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளானென்று ஓர் (99)

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

## II பூதத்தாழ்வார்

### இரண்டாந் திருவந்தாதி.

1. சென்றது இலங்கைமேல் செவ்வேதன் சீற்றத்தால்
கொன்றது இராவணனைக் கூறுங்கால்—நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே விண்ணவர்தம்
வாயோங்குதொல் புகழான்வந்து. (25)

2. மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்—எனைப்பலரும்
தேவாதி தேவனெனப்படுவான் முன்னொருநாள்
மாவாய் பிளந்தமகன். (28)

3. துணிந்ததுசிந்தை துழாயலங்கல் அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளத்துப்பல்கால்—பணிந்ததுவும்
வேய்பிறங்குசாரல் விறல்வேங்கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை. (33)

4. ஊளதென் றிருமாவார் உண்டில்லையென்று
தளர்தல தனருகுஞ்சாரார்—அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று. (45)

5. பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்—பயின்றது
அணி திகழும்சோலை அணி நீர்மலையே
மணி திகழும் வண் தடக்கைமால். (46)

6. நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியா திளங்கிரி யென்றெண்ணி—பிறியாது
பூங்கொடிக்கள் வைகும்பொரு புனற்குன்றென்னும்
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு. (53)

7. போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போது உள்ளம்! போது
மணி வேங்கடவன் மலரடிக்கே செல்ல
அணி வேங்கடவன் பேராய்ந்து. (72)

8. பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை. (75)

9. வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்று
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று (54)

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

---

## III பேயாழ்வார்.

### இயற்பா மூன்றாந்திருவந்தாதி.

1. மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்—நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம்பணிந்து (14)

2. சிறந்தஎன் சிந்தையும் செங்கணரவும்
நிறைந்தசீர்நீள் கச்சியுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண் துழாயார். (26)

3. சேர்ந்ததிருமால் கடல் குடந்தைவேங்கடம்
நேர்ந்தஎன் சிந்தை நிறைவிசும்பு—வாய்ந்த
மறைபாடகம் அனந்தன் வண்துழாய்க் கண்ணி
இறைபாடியாய இவை. (30)

4. பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்
நூற்கடலும் நுண்ணூல தாமரைமேல்—பார்பட்
டிருந்தார் மனமும் இடமாகக்கொண்டான்
குருந்தொசித்த கோபாலகன் (32)

5. இறையாய் நிலனாகி எண்திசையும் தானாய்
மறையாய் மறைப்பொருளாய்வானாய்—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தினுள்ளே உளன். (39)

6. ஒளன்கண்டாய் நல்நெஞ்சே ! உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய்
விண்ணொடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணொடுங்கத்தானளந்தமன். (40)

7. புரிந்துமதவேழம் மாப்பிடியோடு ஊடி
திரிந்துசினத்தால் பொருது—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை. (45)

8. தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்தமந்தி
அளிந்தகடுவனையேநோக்கி—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேலொருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு. (58)

9. பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன் விண்ணகர். (61)

10. விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர்வேங்கடம்
மண்ணகரம் மாமாடவேளுக்கை—மண்ணகத்த
தென்குடந்தைதேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. (62)

11. தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும்தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேலெந்தைக்கு
இரண்டுருவு மொன்றாயிசைந்து. (63)

12. பார்த்தகடுவன் சினைநீர் நிழல்கண்டு
பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து—கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடமே மேல்நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான்வெற்பு. (68)

13. வெற்பென்று வேங்கடம்பாடும் வியன்துழாய்
கற்பென்றுசூடும் கருங்குழல்மேல்—மல்பொன்ற
நீண்டதோள்மால்கிடந்த நீள்கடல் நீராடுவான்
பூண்டநாளெல்லாம்புகும். (69)

14. புகுமதத்தால் வாய்பூசிக்கீழ்தாழ்ந்து அருவி
உகுமதத்தால் கால்கழுவிக்கையால்—மிகுமதத்தேன்
விண்டமலர்கொண்டு விறல்வேங்கடவனையே
கண்டுவணங்கும் களிறு. (70)

15. களிறுமுகில் குத்தக்கையெடுத்தோடி
ஒளிறுமருப்பொசிகையாளி—பிளிறி
விழக்கொன்று நின்றதிரும் வேங்கடமே மேல்நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று. (71)

16. குன்றனைன்றிறைய குறமகளிர்கோல் வளைக்கை
சென்று விளையாடும் தீங்கழைபோய்—வென்று
விளங்குமதிகோள்விடுக்கும் வேங்கடமே மேலை
இளங்குமரர் கோமானிடம். (72)

17. இடம்வலமேழ்பூண்ட இரவித்தேரோட்டி
வடமுகவேங்கடத்து மன்னும்—குடம்நயந்த
கூத்தனாய் நின்றான்குரைகழலே கூறுவதே
நாத்தன்னா லுள்ளநலம். (73)

18. சார்ந்தகடுதேய்ப்பத் தடாவிய கோட்டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியினெண்முயலை—சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் திருமலையே ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு. (75)

19. முடிந்தபொழுதில் குறவாணர் ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள் வித்த—தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும் வேங்கடமே மேலொருநாள்
தீங்குழல் வாய்வைத்தான் சிலம்பு. (89)

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

# IV திருமழிசைப்பிரான்

## இயற்பா நான்முகன்றிருவந்தாதி.

1. குறிப்புஎனக்குக் கோட்டியூர்மேயானை யேத்தக்
குறிப்புஎனக்கு நன்மை பயக்க—வெறுப்பனோ?
வேங்கடத்து மேயானைமெய்வினை நோய்எய்தாமல்
தான்கடத்தும் தன்மையான் தான். (34)

2. அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே
ரருவிமணி வரன்றி வந்திழியயானை
வெருவியர வொடுங்கும் வெற்பு. (39)

3. வெற்பென்று வேங்கடம்பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன்காண். (40)

4. காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர
ஓணவிழவிலொலியதிர—பேணி
வருவேங்கடவா என்னுள்ளம்புகுந்தாய்
திருவேங்கடமதனைச்சென்று. (41)

5. சென்றுவணங்குமினோ சேணுயர்வேங்கடத்தை
நின்றுவினைகெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக்கமலநான்முகனும் கண்மூன்றத்தானும்
அடிக்கமலமிட்டேத்தும் அங்கு. (42)

6. மங்குல்தோய்சென்னி வடவேங்கடத்தானை
கங்குல்புகுந்தார்கள் காப்பணிவான்—திங்கள்
சடையேறவைத்தானும் தாமரைமேலானும்
குடையேறத்தாங் குவித்துக்கொண்டு. (43)

7. கொண்டுகுடங்கால் மேல்வைத்தகுழவியாய்
தண்டவரக்கன் தலை தாளால்—பண்டெண்ணி
போம்குமரன்நிற்கும் பொழில்வேங்கடமலைக்கே
போம்குமரருள்ளீர் ! புரிந்து. (44)

8. புரிந்துமலரிட்டுப் புண்டரீகபாதம்
பரிந்துபடுகாடுநிற்ப—தெரிந்தெங்கும்
தானேங்கி நிற்கின்றான் தண்ணருவிவேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. (45)

9. வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்று
எப்பொழுதும் கைநீட்டும்யானையை—எப்பாடும்
வேடுவிளைக்கக் குறவர்வில்லெடுக்கும் வேங்கடமே
நாடுவளைத்தாடுமேல் நன்று. (46)

10. நன்மணிவண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்மணியும் முத்தமும்பூமரமும்—பன்மணிநீ
ரோடுபொருதுருளும் கானமும் வானரமும்
வேடுமுடைவேங்கடம். (47)

11. வேங்கடமே விண்ணோர்தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்—வேங்கடமே
தானவரை வீழத்தன்னாழிப்படைதொட்டு
வானவரைக் காப்பான்மலை. (48)

12. வீற்றிருந்து விண்ணாளவேண்டுவார் வேங்கடத்தான்
பால்திருந்துவைத்தாரே பல்மலர்கள்—மேல்திருந்தி
வாழ்வார் வருமதிபார்த்து அன்பினராய்மற்றவர்க்கே
தாழ்வாயிருப்பார் தமர். (90)

13. செழுங்கொழும் பெரும்பனிபொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில்தழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. (60)

## திருச்சந்த விருத்தம்.

14. கடைந்துபாற்கடல் கிடந்து காலநேமியைக்கடிந்து
உடைந்தவாலி தன் தனக்கு உதவவந்து இராமனுய்
மிடைந்தவேழ்மரங்களும் அடங்கவெய்து வேங்கடம்
அடைந்தமாலபாதமே அடைந்துநாளும் உய்ம்மினோ. (81)

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

---

# V திருப்பாணாழ்வார்.

1. அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளன வொக்கின்றதே (1)

2. மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணை யான்
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்த
[தோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தினுயிரே. (3)

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

---

# VI திருமங்கையாழ்வார்

## 1. ப 8 திருமொழி.

1. கொங்கலர்ந்தமலர்க் குருந்தம் ஒசித்த கோவலன் எம்பிரான்
சங்குதங்குதடங்கடல் துயில்கொண்ட தாமரைக் கண்ணினன்
பொங்கு புள்ளினைவாய் பிளந்தபுராணர் தம்மிடம் பொங்குநீர்ச்
செங்கயல் திளைக்குஞ்சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே. (1)

2. பள்ளியாவது பாற்கடல் அரங்கம் இரங்கவன் பேய்முலை
பிள்ளையாய் உயிருண்ட எந்தை பிரானவன் பெருகுமிடம்
வெள்ளியான் கரியான்மணி நிறவண்ணனென்றெண்ணி நாள்
[தோறும்
தெள்ளியார்வணங்கும் மலைத்திருவேங்கடம் அடைநெஞ்சமே. (2)

3. நின்றமாமருது இற்றுவீழ நடந்தநின்மலன்நேமியான்
என்றும்வானவர் கைதொழும் இணைத்தாமரையடியெம்பிரான்
கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்கு இடர்நீக்குவான்
சென்றுகுன்றமெடுத்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே (3)

4. பார்த்தற்காய் அன்று பாரதம்கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்து அங்கு ஆயர்தம்பாடியில் குரவை பிணைந்த எம்
[கோவலன்
ஏத்துவார்தம் மனத்துள்ளான் இடவெந்தை மேவிய எம்பிரான்
தீர்த்த நீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம் அடைநெஞ்சமே (4)

5. வண்கையான் அவுணர்க்கு நாயகன் வேள்வியில் சென்று
[மாணியாய்
மண்கையாலிரந்தான் மராமரமேழும் எய்தவலத்தினன்
எண்கையான்இமையத்துள்ளான் இருஞ்சோலைமேவியஎம்பிரான்
திண்கைம்மா துயர்தீர்த்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே. (5)

6. எண்திசைகளும் ஏழுலகமும் வாங்கிப் பொன்வயிற்றில் பெய்து
பண்டு ஓராலிலைப் பள்ளிகொண்டவன் பால்மதிக்கு இடர்
[தீர்த்தவன்
ஒண்திறலவுணனுரத்துகிர் வைத்தவன் ஒள்ளெயிற்றோடு
திண் திறலரியா யவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே. (6)

7. பாரும் நீர் எரி காற்றினோடு ஆகாசமும் இவையாயினன்
பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகுமிடம்
காரும் வார்பனி நீள் விசும்பிடைச் சோருமாமுகில் தோய்தர
சேரும் வார்பொழில் சூழ் எழில் திருவேங்கடம் அடை
[நெஞ்சமே. (7)

8. அம்பரம் அனல்கால் நிலம் சலமாகிநின்ற அமரர் கோன்
வம்புலா மலர்மேல் மலிமடமங்கைதன் கொழுநனவன்
கொம்பினன்னஇடை மடக்குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனம்மவை காவல்கொள் திருவேங்கடம் அடைநெஞ்சமே
(8)

9. பேசுமின்திருநாமம் எட்டெழுத்தும் சொல்லிநின்று பின்னரும்
பேசுவார்தமை உய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்
வாசமாமலர் நாறுவார் பொழில் சூழ்தரும் உலகுக்கெலாம்
தேசமாய்த்திகழும் மலைத்திருவேங்கடம் அடைநெஞ்சமே. (9)

10. செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடத்து உறைசெல்வனை
மங்கையர்தலைவன் கலிகன்றி வண் தமிழ்ச்செஞ்சொல்
[மாலைகள்
சங்கையின்றித் தரித்து உரைக்க வல்லார்கள் தஞ்சமதாகவே
வங்கமாகடல் வையம் காவலராகி வானுலகாள்வாரே. (10)

## 1 ப. 9 திருமொழி.

11. தாயேதந்தையென்றும் தாரமேகிளை மக்களென்றும
நோயே பட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோராசையினல்
வேயேய்பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆளென்னைக்கொண்டருளே.(1)

12. மானேய் கண் மடவார் மயக்கில்பட்டு மாநிலத்து
நானே நானவித நரகம் புகும் பாவம் செய்தேன்
தேனேய் பூம்பொழில் சூழ் திருவேங்கடமாமலை என்
ஆனய்வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (2)

13. கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினல்
என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்
குன்றேய் மேகமதிர் குளிர் மாமலை வேங்கடவா!
அன்றே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (3)

14. குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந்தெய்த் தொழிந்தேன்
நலந்தானென்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்
நிலம்தோய் நீள்முகில் சேர் நெறியார் திருவேங்கடவா!
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே (4)

15. எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்தொழிந்தேன்
துப்பா! நின்னடியே தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கடமாமலை என்
அப்பா! வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருளே. (5)

16. மண்ணாய் நீர் எரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்து எய்த்தொழிந்தேன்
விண்ணார்நீள்சிகர விரையார் திருவேங்கடவா!
அண்ணாவந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (6)

17. தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்.
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்து ஏழையானேன்
கரிசேர் பூம்பொழில் சூழ் கனமாமலை வேங்கடவா!
அரியே! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (7)

18. நோற்றேன் பல்பிறவி நுன்னைக்காண்பதோ ராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான்!
கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர் சோலைசூழ் வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (8)

19. பற்றேல் ஒன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்
மற்றே லொன்றறியேன் மாயனே ! எங்கள் மாதவனே
கல் தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா !
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. (9)

20. கண்ணாய் ஏழுலகுக்கு உயிராய எங்கார் வண்ணனை
விண்ணோர் தாம் பரவும் பொழில் வேங்கட வேதியனை
திண்ணார் மாடங்கள் சூழ் திருமங்கையர் கோன் கலியன்
பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே. (10)

## 1. ப 10 திருமொழி.

21. கண்ணார் கடல்சூழ் இலங்கைக்கு இறைவன் தன்
திண்ணாகம்பிளக்கச் சரம் செல உய்த்தாய்!
விண்ணோர் தொழும் வேங்கடமாமலை மேய
அண்ணா! அடியேனிடரைக் களையாயே. (1)

22. இலங்கைப் பதிக்கு அன்று இறையாய அரக்கர்
குலம் கெட்டு அவர்மாளக்கொடிப்புள் திரித்தாய் !
விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய
அலங்கல் துளபமுடியாய் ! அருளாயே. (2)

23. நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு
ஏராலமிளந் தளிர் மேல் துயில் எந்தாய் !
சீரார் திருவேங்கட மாமலை மேய
ஆராவமுதே ! அடியேற்கு அருளாயே. (3)

24. உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாக
கொண்டாய் குறளாய் நிலம் ஈரடியாலே
விண்தோய் சிகரத் திருவேங்கடம் மேய
அண்டா ! அடியேனுக்கு அருள் புரியாயே. (4)

25. தூணாய் அதனூடு அரியாய் வந்து தோன்றி
பேணா அவுணனுடலம் பிளந்திட்டாய்
சேணார் திருவேங்கட மாமலை மேய
கோணா கணையாய் ! குறிக்கொள் எனைநீயே. (5)

26. மன்னா இம்மனி சப்பிறவியை நீக்கி
தன்னாக்கித் தன்இன்னருள் செய்யும் தலைவன்
மின்னார் முகில் சேர் திருவேங்கடம் மேய
என்னானை என்னப்பன் என் நெஞ்சிலுளானே. (6)

27. மானேய் மடநோக்கி திறத்து எதிர்வந்த
ஆனேழ் விடை செற்ற அணிவரைத்தோளா !
தேனே ! திருவேங்கடமாமலை மேய
கோனே ! என்மனம் குடிகொண்டிருந்தாயே. (7)

28. சேயன் அணியன் எனசிந்தையுள் நின்ற
மாயன் மணிவாளொளி வெண் தரளங்கள்
வேய் விண்டு உதிர் வேங்கடமாமலை மேய
ஆயனடி யல்லது மற்றறியேனே. (8)

29. வந்தாய் என்மனம் புகுந்தாய் மன்னி நின்ருய்
நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!
சிந்தாமணியே! திருவேங்கடம் மேய
எந்தாய்! இனியான் உன்னை என்றும் விடேனே. (9)

30. வில்லார் மலி வேங்கட மாமலை மேய
மல்லார் திரள் தோள் மணி வண்ணனம்மானை
கல்லார் திரள் தோள் கலியன் சொன்னமாலை
வல்லாரவர் வானவராகுவர் தாமே. (10)

---

## 2. ப 1 திருமொழி.

31. வானவர் தங்கள் சிந்தை போல என் நெஞ்சமே!
[இனிது வந்து மாதவ
மானவர் தங்கள் சிந்தை அமர்ந்துறைகின்ற எந்தை
கானவரிடு காரகில் புகை ஓங்கு வேங்கடம்மேவி மாண்குற
ளான அந்தணற்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே. (1)

32. உறவு சுற்ற மென்ருென்றிலா ஒருவன் உகந்தவர்
[தம்மை மண்மிசைப்
பிறவியே கெடுப்பான் அது கண்டு என் நெஞ்சமென்பாய்
குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சி மருளிசை பாடும்
[வேங்கடத்து
அறவனுயற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே. (2)

33. இண்டை யாயின கொண்டு தொண்டர்களேத்துவாருறவோடும்
கொண்டு போயிடவும் அது கண்டு என் நெஞ்ச
[மென்பாய்வானிடைக்
வண்டு வாழ்வட வேங்கடமலை கோயில்கொண்டதனேடும்மீமிசை
அண்ட மாண்டிருப்பாற்கு அடிமைத்தொழில் பூண்டாயே. (3)

34. பாவியாது செய்தாய் என் நெஞ்சமே பண்டு தொண்டு
[செய்தாரை மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் விசும் பேறவைக்கும் எந்தை
கோவி நாயகன் கொண்டலுந் துயர் வேங்கடமலையாண்டு
ஆவியாயிருப்பாற்கு அடிமைத்தொழில் பூண்டாயே. (4)

35. பொங்கு போதியும் பிண்டியும் முடைப் புத்தர்
[நோன்பியர் பள்ளியுள்ளுறை
தங்கள் தேவரும் தாங்களுமேயாக என் நெஞ்சமென்பாய்
எங்கும் வானவர் தானவர் நிறைத்தேத்தும் வேங்கடம்
[மேவி நின்றருள்
அங்கணையற்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே. (5)

36. துவரியாடையர் மட்டையர் சமண் தொண்டர்கள்
[மண்டியுண்டு பின்னரும்
தமரும் தாங்களுமே தடிக்க என் நெஞ்சமென்பாய்
கவரி மாக்கணம் சேரும் வேங்கடம் கோயில்கொண்ட
[கண்ணார் விசும்பிடை
அமரநாயகற்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே. (6)

37. தருக்கினல் சமண்செய்து சோறு தண் தயிரினல்
[திரளை மிடற்றிடை
நெருக்கு வாரலக் கனைது கண்டு என் நெஞ்சமென்பாய்!
மருட்கள் வண்டுகள் பாடும் வேங்கடம் கோயில்
[கொண்டதனேடும் வானிடை
அருக்கன் மேவி நிற்பார்க்கு அடிமைத்தொழில் பூண்டாயே. (7)

38. சேயன் அணியன் சிறியன் பெரியனென்பதும் சிலர்
[பேசக்கேட்டிருந்
தே என் நெஞ்சமென்பாய்! எனக்கு ஒன்றும் சொல்லாதே
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி வேங்கடமலை
[கோவில் மேவிய
ஆயர் நாயகற்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே. (8)

39. கூடியாடி யுரைத்ததே உரைத்தாய் என் நெஞ்சமென்பாய்!
[துணிந்து கேள்
பாடியாடிப் பலரும் பணிந்தேத்திக் காண்கிலர்
ஆடு தாமரை போனும் ஈசனும் அமரர்கோனும்
[நின்றேத்து வேங்கடத்து
ஆடு கூத்தனுக்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே. (9)

40. மின்னு மாமுகில் மேவு தண் திருவேங்கடமலை கோவில் மேவிய
அன்னமாய் நிகழ்ந்த அமரர் பெருமானை
கன்னிமா மதிள் மங்கையர் கலிகன்றி இன்தமிழா
[லுரைத்த இம்
மன்னுபாடல் வல்லார்க்கு இடமாகும் வானுலகே. (10)

---

41. அன்றியவாணனாயிரம் தோளும்
துணிய அன்று ஆழி தொட்டானை
மின் திகழ் குடுமி வேங்கடமலை மேல்
மேவிய வேத நல் விளக்கை
தென்திசைத் திலதமனையவர் நாங்கைச்
செம்பொன் செய் கோயிலினுள்ளே
மன்றது பொலிய மகிழ்ந்து மகிழ்ந்து நின்றானை
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே.

(4. ப. 3. தி. 8)

42. வேடார் திருவேங்கடம் மேய விளக்கே!
நாடார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில் சூழ் திருவெள்ளக் குளத்தாய்!
பாடா வருவேன் வினையாயின பாற்றே.

(4. ப. 7. தி. 5)

43. வாம்பரியுகமன்னர்தம் உயிர்செக ஐவர்கட்கு அரசளித்த
காம்பினார் திருவேங்கடப்பொருப்ப! நின்காதலைஅருள்எனக்கு
மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில்வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனித்தேனது நுகர் திருவெள்ளறை நின்றானே.

(5. ப. 3. தி. 4)

44. வெருவா தாள்வாய் வெருவி வேங்கடம்மே!
வேங்கடமே! என்கின்றாளால்
மருவாளால் என்குடங்கால் வாள்நெடுங்கண்
துயில் மறந்தாள் வண்டார் கொண்ட
லுருவாளன் வானவர் தமுயிராளன்
ஒலிதிரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன் என் மகளைச் செய்தனகள்
எங்ஙனம் நான் சிந்திக்கேனே.

(5. ப. 5. தி. 1)

45. சிந்தனையைத்தவ நெறியைத் திருமாலை பிரியாது
வந்து எனது மனத்து இருந்த வடமலையை வரிவண்டார்
கொந்தணைந்த பொழிற் கோவல் உலகளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை யான் கண்டது அணி நீர்த்தென்னரங்கத்தே.

(5. ப. 6. தி. 7)

46. முளிந்தீந்த வேங்கடத்து மூரிப்பெருங் களிற்றால்
விளிந்தீர்ந்த மாமரம் போல் வீழ்ந்தாரை நினையாதே
அளிந்தோர்ந்த சிந்தை நின்பால் அடியேற்குவானுலகம்
தெளிந்தே என்று எய்துவது? திருவிண்ணகரானே.

(6. ப. 3 தி. 8)

47. மான் கொண்டதோல் மார்வின் மாணியாய் மாவலி மண்
தான் கொண்டு தாளாலளந்த பெருமானை
தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தானை
நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே.

(6 ப. 8 தி. 1)

48. ஆங்கு வெந்நகரத்து அழுந்தும்போது
அஞ்சேலென்று அடியேனை அங்கே வந்து
தாங்கு தாமரை யன்ன பொன்னாரடி
எம்பிரானை உம்பர்க் கணியாய் நின்ற
வேங்கடத் தரியைப் பரிகீறியை
வெண்ணெயுண்டு உரலினிடையாப்புண்ட
தீங்கரும்பினை தேனை நன் பாலினையன்றி
என் மனம் சிந்தை செய்யாதே.

(7 ப. 3 தி. 4)

49. எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை
வாசவார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனை பங்கில் வைத்துகந்தான் தன்னைப்
பான்மையைப் பனிமாமதியம் தவழ்
மங்குலைச் சுடரை வடமாமலை
யுச்சியை நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை பகலைச் சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே.

(7 ப. 10 தி. 3)

50. அருவிசேர் வேங்கடம் நீர் மலையென்றுவாய்
வெருவினுள் மெய்யம் வினவி யிருக்கின்றுள்
பெருகுசீர்க் கண்ண புரம் என்று பேசினுள்
உருகினுள் உள்மெலிந்தாள் இது என் கொலோ?
(8 ப 2 தி. 3)

51. வடவரைநின்றும் வந்துஇன்று கணபுரம்
இடவகைகொள்வது யாமென்றுபேசினுள்
மடவரல்மாதர் என்பேதை இவர்க்கு இவள்
கடவதென் கண்துயில்இன்று இவர்கொள்ளவே.
(8 ப. 2 தி. 6)

52. பண்ணுலா மென்மொழிப்பாவைமார் பணைமுலை
[யணைதும் நாமென்று
எண்ணு வாரெண்ணமதொழித்து நீ பிழைத்துயக் கருதினுயேல்
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற வேங்கடத்துளார்
[வளங்கொள் முந்நீர்
வண்ணனுர் வல்லவாழ் சொல்லுமாவல்லையாய் மருவு நெஞ்சே.
(9 ப. 7 தி. 4)

53. வலம்புரி யாழியனை வரையார் திரள் தோளன் தன்னை
புலப்புரி நூலவனைப் பொழில் வேங்கட வேதியனை
சிலப்பியலாறுடைய திருமாலிருஞ் சோலை நின்ற
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்? என் நன்னுதலே.
(9 ப. 9 தி 9)

54. பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்து உச்சியில் கண்டு போய்
என்னையாளுடை ஈசனை எம்பிரான்
தன்னையாம் சென்று காண்டும் தண் காவிலே.
(10 ப. 1 தி. 2)

55. சொல்லாய் பைங்கிளியே!
சுடராழி வலனுயர்த்த
மல்லார் தோள் வட வேங்கடவனை வரச்
சொல்லாய் பைங்கிளியே.
(10 ப. 10 தி. 5)

56. கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் கைவளைகள்
என்னேகழன்ற? இவை என்ன மாயங்கள்?
பெண்ணனேம் பெண்மையோம் நிற்க அவன் மேய
அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே.

(11 ப. 3 தி. 7)

57. கள்ளத்தால் மாவலியை மூவடி மண் கொண்டளந்தான்
வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ!
வெள்ளத்தான் வேங்கடத்தானேலும் கலிகன்றி
உள்ளத்திலுள்ளே உளன் கண்டாய் சாழலே

(11 ப. 5 தி. 10)

58. நீள் நாகம் சுற்றி நெடுவரை நட்டு ஆழ்கடலைப்
பேணன் கடைந்து அமுதம் கொண்டு உகந்த பெம்மானை
பூணாரமார்வனைப் புள்ளூரும் பொன்மலையை
காணாதார் கண் என்றும் கண்ணல்ல கண்டாமே.

(11 ப. 7 தி. 1)

59. இம்மை மறுமைதன்னை எமக்கு வீடாகிநின்ற
மெய்ம்மையை விரிந்த சோலைவியன் திருவரங்கம்மேய
செம்மையைக் கருமைதன்னைத் திருமலை யொருமையானை
தன்மையை நினைவார் என் தன் தலைமிசை மன்னுவாரே.

(திருக்குறுந்தாண்டகம் 7)

60. நீரகத்தாய்! நெடுவரையினுச்சிமேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய்! ஒண்துறை நீர்வெஃகாவுள்ளாய்
உள்ளுவாருள்ளத்தாய்! உலகமேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமருபூங்காவிரியின் தென்பால்மன்னு
பேரகத்தாய்! பேராது என்னெஞ்சினுள்ளாய்
பெருமான்! உன்திருவடியே பேணினேனே.

(திருநெடுந்தாண்டகம் 8)

61. வங்கத்தால்மாமணி வந்துந்துமுந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சியூராய்! பேராய்
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல்மார்வன்
குலவரையன்மடப்பாவை இடப்பால்கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின்மேலாய்!
பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா!
எங்குற்றாய்! எம்பெருமான்! உன்னைநாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே.

(திருநெடுந்தாண்டகம் 9)

62. கன்றுமேய்த்து இனிதுகந்தகாளாய்! என்றும்
கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே! என்றும்
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்
வட திருவேங்கடம் மேயமைந்தா! என்றும்
வென்றசுரர்குலம் களைந்த வேந்தே! என்றும்
விரி பொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்
துன்றுகுழல் கருநிறத்து என்துணையே! என்றும்
துணைமுலை மேல்துளி சோரச் சோர்கின்றாளே.

(திருந்நெடுந்தாண்டகம் 16)

63. "சிரார் திருவேங்கடமே."

(சிறியதிருமடல் 69)

64. "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும்."

(பெரியதிருமடல் 6)

65. "மன்னும் வடமலையை மத்தாக."

ஷை 105.

66. "மின்னிமழை தவழும் வேங்கடத்து எம் வித்தகனை."

ஷை 124.

8A/5-9

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## VII. குலசேகர ஆழ்வார்.

### பெருமாள் திருமொழி, 4-ம் திருமொழி.

1. ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றான் அடிமைத்திறமல்லால்
கூனேறுசங்க மிடத்தான் தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப்பிறப்பேனே. (1)

2. ஆனாதசெல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும் விதியுடையெனாவேனே. (2)

3. பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்
மின்வட்டச்சுடராழி வேங்கடககோன் தானுமிழும்
பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவெனாவேனே (3)

4. ஒண்பவள வேலையுலவு தண்பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து
செண்பகமாய்நிற்கும் திருவுடையெனாவேனே. (4)

5. கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்கும் தவமுடையெனாவேனே. (5)

6: மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலொடும் ஆடல்வை ஆதரியேன்
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தெனாவேனே. (6)

7. வானாளும் மாபதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயும் கருத்துடையெனாவேனே. (7)

8. பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய் பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானன்
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையெனாவேனே. (8)

9. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே. (9)

10. உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற்கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. (10)

11. மன்னியதண் சாரல்வட வேங்கடத்தான்தன்
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி
கொன்னவிலும் கூர்வேல் குலசேகரன்சொன்ன
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே. (11)

குலசேகர ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

## VIII. பெரியாழ்வார்.

1. சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதிபரந்தெங்கும்
எத்தனை செய்யினும் என்மகன் முகம் நேரொவ்வாய்
வித்தகன் வேங்கடவாணன் உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்புலி! கடிதோடிவா.

க ய ச தி ௫

2. என்னிதுமாயம்? என்னப்பன் அறிந்திலன்
முன்னைய வண்ணமே கொண்டு அளவாயென்ன
மன்னு நமுசியை வானில் சுழற்றிய
மின்னு முடியோனே! அச்சோவச்சோ.
வேங்கடவாணனே! அச்சோவச்சோ.

க ய அ தி அ.

3. தென்னிலங்கை மன்னன்சிரம் தோள் துணிசெய்து
மின்னிலங்கு பூண்விபீடண நம்பிக்கு
என்னிலங்கு நாமத்தளவும் அரசென்ற
மின்னிலங்காரற்கு ஓர் கோல் கொண்டுவா
வேங்கடவாணர்க்கு ஓர் கோல் கொண்டுவா.

(2 ப. 6 தி. 9.)

4. மச்சொடு மாளிகை யேறி மாதர்கள் தம்மிடம் புக்கு
கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்புதுகிலவைகீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்! நீள் திருவேங்கடத்து எந்தாய்
பச்சைத் தமனகத்தோடு பாதிரிப் பூச்சூட்டவாராய்.

(2 ப. 7 தி. 3.)

5. போதர்கண்டாய் இங்கே போதர்கண்டாய்
போதரே னென்னாதே போதர் கண்டாய்
ஏதேனும் சொல்லி அசலகத்தார்
ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன்
கோதுகலமுடைக் குட்டனே! ஓ
குன்றெடுத்தாய்! குடமாடு கூத்தா!
வேதப்பொருளே! என் வேங்கடவா!
வித்தகனே! இங்கே போதராயே.

(2 ப. 9 தி. 6.)

6. கடியார் பொழிலணி வேங்கடவா! கரும்போரேறே!
[நீயுகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே
[போனாய் மாலே
கடிய வெங்கானிடைக் கன்றின்பின் போன சிறுக்குட்டச்
[செங்கமல
அடியும் வெதும்பி உன் கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய்
[நீ எம்பிரான்.

(3 ப. 3 தி. 4.)

7. சென்னி யோங்குதண் திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னைவாழ நின்றநம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி
[யொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே.
(5 ப. 4 தி. 1.)

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

---

## IX நாச்சியார் திருமொழி.

1. தையொரு திங்களும் தரை விளக்கித்
தண் மண்டல மிட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணற் கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங் கரித்து அனங்கதேவா!
உய்யவு மாங்கொலோ வென்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.
(1 தி. 1 ப.)

2. மத்தநன் னறுமலர் முருக்க மலர்கொண்டு
முப்போதும் உன்னடிவணங்கி
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கட வாணனென்னும்
விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே.
(1 தி. 3 ப.)

3. காட்டில் வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்தஎன் கைப்பற்றி தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே.
(4 தி. 2 ப.)

4. வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக்காட்டான்
உள்ளம் புகுந்து என்னை நைவித்து
நாளும் உயிர் பெய்து கூத்தாட்டுக்காணும்
கள்ளவிழ் செண்பகப்பூமலர் கோதிக்
களித் திசைபாடும் குயிலே!
மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதஎன்
வேங்கடவன் வரக்கூவாய். (5 தி. 2 ப.)

5. விண்ணீல மேலாப்பு விரித்தார்ப்போல் மேகங்காள்!
தெண்ணீர்பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே.

6. மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தி னிறங்கொண்ட தாடாளன் வார்த்தையென்னே
காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டு, இடைக்குங்கல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நானிருப்பேனே.

7. ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்
எளிமையால் இட்டுஎன்னை ஈடழியப்போயினவால்
குளிரருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள்! ஆவி காத்திருப்பேனே.

8. மின்னாகத்தெழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கிய சீர்மார்வர்க்கு
என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்
பொன்னாகம் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே.

9. வான்கொண்டு கிளிர்ந்தெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்
ஊன்கொண்ட வள்ளுகிராகில் இரணியனை உடலிடந்தான்
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.

10. சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!
உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்துஎன்னை
நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே.

11. சங்கமா கடல் கடைந்தான் தண்முகில்காள் ! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள்
தங்குமேல் என்னுவிதங்கு மென்று உரையீரே.

12. கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் ! வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப் பொருதவனர் பேர்சொல்லி
நீர்காலத் தெருக்கின் அம்பழவிலைபோல் வீழ்வேனை
வார்காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்தருளாரே.

13. மதயானை போலெழுந்த மாமுகில்காள் ! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் ! பாம்பணையான் வார்த்தைஎன்னே
கதி என்றும் தானுவான் கருதாது ஓர் பெண் கொடியை
வதைசெய்தா னென்னும்சொல் வையகத்தார் மதியாரே.

14. நாகத்தினணையானை நன்னுதலாள் நயந்து உரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்துரைப்பாரவர் அடியாராகுவரே.

(8 தி 1-10)

15. பாடும் குயில்காள் ! ஈதென்ன பாடல்? நல்வேங்கட
நாடர் நமக்குஒரு வாழ்வுதந்தால் வந்து பாடுமின்
ஆடும் கருளக் கொடியுடையார் வந்து அருள்செய்து
கூடுவராயிடில் கூவிநும் பாட்டுக்கள் கேட்டுமே.

(10 தி 3 ப)

16. மழையே ! மழையே ! மண் புறம்பூசி உள்ளாய்நின்ற
மெழுகூற்றினாற்போல் ஊற்றுநல் வேங்கடத்துள்நின்ற
அழகப்பிரானர்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே.

(10 தி 8 ப)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

## X நம்மாழ்வார்.

1. கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே. (8 தி 3 ப)

2. எந்தாய்! தண்திருவேங்கடத்துள் நின்றாய்! இலங்கை
[செற்றாய் மராமரம்
பைந்தாளேழுருவ ஒருவாளி கோத்தவில்லா!
கொந்தார் தண்ணந்துழாயினாய்! அமுதே! உன்னை என்னுள்ளே
குழைத்தஎம்
மைந்தா! வானேறே! இனிஎங்குப் போகின்றதே.
(6 தி. 9 ப.)

3. போகின்ற காலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள்
[தாய்தந்தையுயி
ராகின்றாய்! உன்னைநான் அடைந்தேன் விடுவேனோ?
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் நாதனே! பரமா! தண்
வேங்கடம்
மேகின்றாய்! தண்துழாய் விரைநாறு கண்ணியனே.
(6 தி :0 ப)

4. பற்பநாபன் உயர்வறவுயரும் பெருந்திறலோன்
எற்பரன் என்னை யாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத்தந்த
கற்பகம் என் அமுதம் கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர் பிரான் எந்தை தாமோதரனே.
(7 தி 11 ப)

### 3-ஆந் திருமொழி.

5. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமைசெய்ய வேண்டும்நாம்
தெழிகுர லருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைககே.

6. எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை வானவர் வானவர் கோனொடும்
சிந்து பூமகிழும் திருவேங்கடத்து
அந்தமில் புகழ்க்காரெழிலண்ணலே.

7. அண்ணல் மாயன் அணிகொள் செந்தாமரைக்
கண்ணன் செங்கனிவாய்க் கருமாணிக்கம்
தெண்ணிறைச் சுனைநீர்த் திருவேங்கடத்து
எண்ணில் தொல்புகழ் வானவர் ஈசனே.

8. ஈசன் வானவர்க்கென்பன் என்றால் அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு?
நீசனேன் நிறை ஒன்றுமிலேன் என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே.

9. சோதியாகி எல்லாவுலகும் தொழும்
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ?
வேதியர் முழுவேதத்தமுதத்தை
தீதில் சேர்திரு வேங்கடத்தானையே.

10. வேங்கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாம்கடமை அது சுமந்தார்கட்கே.

11. சுமந்து மாமலர் நீர்சுடர் தூபம்கொண்டு
அமர்ந்து வானவர் வானவர்கோனொடும்
நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்கு
சமன்கொள் வீடுதரும் தடங்குன்றமே.

12. குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்தபிரான் பரன்
சென்று சேர்திரு வேங்கடமாமலை
ஒன்றமே தொழ நம்வினை ஓயுமே.

13. ஓயும் மூப்புப் பிறப்பு இறப்புப்பிணி
வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து
ஆயன் நாள்மலராம் அடித்தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே

14. வைத்தநாள்வரை எல்லை குறுகிச்சென்று
எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ
பைத்த பாம்பணையான் திருவேங்கடம்
மொய்த்தசோலை மொய்பூந்தடம் தாழ்வரே.

15. தாள்பரப்பி மண் தாவிய ஈசனை
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன் சொல்
கேழிலாயிரத்து இப்பத்தும் வல்லவர்
வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழவே.

16. வார்புனலந்தணருவி வடதிருவேங்கடத்தெந்தை
பேர்பலசொல்லிப் பிதற்றிப் பித்தரென்றே பிறர்கூற
ஊர்பல புக்கும் புகாதும் உலோகர் சிரிக்கநின்றாடி
ஆர்வம்பெருகிக் குனிப்பார் அமரர் தொழப்படுவாரே.

(5 தி. 8 ப.)

17. சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவேன்கேண்மினோ
என்னாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னாதெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே.

(9 தி. 1. ப.)

18. கட்டெழில் சோலைநல் வேங்கடவாணனை
கட்டெழில் தென்குருகூர்ச் சடகோபன்சொல்
கட்டெழிலாயிரத்து இப்பத்தும் வல்லவர்
கட்டெழில் வானவர் போகமுண்பாரே.

(6 தி. 11 ப.)

19. விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்!
மண்மீதுழல்வாய்! இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்!
எண்மீதியன்ற புறவண்டத்தாய்! எனதாவி
உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ.

(9 தி. 5 ப.)

---

## ஆறும்பத்து—10-ஆந் திருவாய்மொழி.

20. உலகமுண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தியம்மானே!
நிலவும்சுடர் சூழொளிமூர்த்தி! நெடியாய்! அடியேனாருயிரே!
திலதமுலகுக்காய் நின்றதிருவேங்கடத்து எம்பெருமானே
குலதொல்லடியேன் உன்பாதம் கூடுமாறு கூறாயே.

கூறாய் நீறாய் நிலனாகிக் கொடுவல்லசுரர் குலமெல்லாம்
சீறாஎறியும் திருநேமிவலவா ! தெய்வக்கோமானே !
சேறார்சுனைத்தாமரை செந்தீமலரும் திருவேங்கடத்தானே !
ஆறாவன்பிலடியேன் உன்னடி சேர்வண்ணம் அருளாயே.

22. வண்ணமருள் கொளணி மேகவண்ணா! மாயவம்மானே!
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே ! இமையோரதிபதியே!
தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்க
[டத்தானே !
அண்ணலே! உன்னடிசேர அடியேற்கு அவாவென்னாயே.

23. ஆவா! என்னாது உலகத்தையலைக்கும் அசுரர் வாணாள்மேல்
தீவாய் வாளிமழை பொழிந்த சிலையா ! திருமாமகள் கேள்வா
தேவா ! சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்க
[டத்தானே!
பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே.

24. புணராநின்றமரமேழ் அன்றெய்த ஒரு வில்வலவாவோ
புணரேய்நின்ற மாமிரண்டின் நடுவேபோன முதல்வாவோ
திணரார்மேகமெனக்களிறு சேரும்திருவேங்கடத்தானே
திணரார்சார்ங்கத்து உன்பாதம்சேர்வதடியே னெந்நாளே ?

25. எந்நாளே? நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்
[கென்று
எந்நாளும்நின்று இமையோர்களேத்தி இறைஞ்சிஇனமினமாய்
மெய்ந்நாமனத்தால் வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே
மெய்ந்நானெய்தி எந்நாள் உன்னடிக்கண் அடியேன்மேவுவதே?

26. அடியேன்மேவியமர்கின்றவமுதே! இமையோரதிபதியே!
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே
நொடியார்பொழுதும் உன்பாதம்காண நோலாதாற்றேனே

27. நோலாதாற்றேன் உன்பாதம்காணவென்று நுண்ணுணர்வின்
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும்
சேலேய்கண்ணார் பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!
மாலாய்மயக்கி அடியேன்பால் வந்தாய்போலே வாராயே

28. வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே!
செந்தாமரைக்கண் செங்கனிவாய்நால் தோளமுதே! எனதுயி
[ரே!
சிந்தாமணிகள் பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே!
அந்தோ! அடியேன் உன்பாதம் அகலகில்லேன் இறையுமே

29. அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பா
நிகரில்புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னை யாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்துபுகுந்தே
[னே

30 அடிக்கீழமர்ந்து புகுந்துஅடியீர்! வாழ்மின் என்றென்று அருள்
[கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவை
[பத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே.

---

## ஏழாம்பத்து—4-ஆந் திருவாய்மொழி.

31. ஆழியெழச்சங்கும் வில்லுமெழதிசை
வாழியெழத்தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே.

32. ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலிஅப்பன்
சாறுபட அமுதம்கொண்ட நான்றே.

33. நான்றில ஏழ்மண்ணும் தானத்தவே பின்னும்
நான்றிலஏழ்மலைதானத்தவே பின்னும்
நான்றில ஏழ்கடல் தானத்தவே அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில் கொண்டநாளே.

34. நாளுமெழநில நீருமெழ விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ மலை
தாளுமெழச்சுடர் தானுமெழ அப்பன்
ஊளியெழ உலகமுண்ட ஊணே.

35. ஊணுடைமல்லர் ததைந்தவொலி மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமொலி விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொலி அப்பன்
காணுடைப்பாரதம் கையறை போழ்தே.

36. போழ்துமெலிந்த புன்செக்கரில் வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலாமலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால் அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரரைக் கொல்லுமாறே.

37. மாறுநிரைத்து இறைக்கும் சரங்கள் இன
நூறுபிணம் மலைபோல்புரள கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா அப்பன்
நீறுபட இலங்கை செற்றநேரே.

38. நேர்சரிந்தான் கொடிக்கோழி கொண்டான் பின்னும்
நேர்சரிந்தான் எரியும் அனலோன் பின்னும்
நேர்சரிந்தான் முக்கண் மூர்த்திகண்டீர் அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள் கொண்டவன்றே.

39. அன்றுமண் நீர்எரிகால் விண்மலைமுதல்
அன்றுசுடர் இரண்டுபிறவும் பின்னும்
அன்று மழையுயிர் தேவும் மற்றும் அப்பன்
அன்று முதல் உலகம் செய்ததுமே.

40. மேய்நிரை கீழ்புக மாபுரள சுனை
வாய் நிறைநீர் பிளிரிச் சொரிய இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க அப்பன்
தீமழை காத்துக் குன்றமெடுத்தானே.

41. குன்றமெடுத்தபிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்த ஓராயிரத்துள் இவை
வென்றி தரும் பத்தும் மேவிக்கற்பார்க்கே.

42. நங்கள் வரிவளையா யங்காளோ !
நம்முடையேதலர் முன்புநாணி
நுங்கட்கு யானென்றுரைக்கும் மாற்றம்
நோக்குகின்றேன் எங்கும் காணமாட்டேன்
சங்கம் சரிந்தன சாயிழந்தேன்
தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந்தேன்
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன்
வேங்கடவாணனை வேண்டிச்சென்றே.

(8 ப 2 தி 1.)

43. இன்றிப்போக இருவினையும் கெடுத்து
ஒன்றியாக்கை புகாமை உய்யக்கொள்வான்
நின்ற வேங்கடம் நீள்நிலத்து உள்ளது
சென்று தேவர்கள் கைதொழுவார்களே.

(9 ப 3 தி 8.)

44. மேயான் வேங்கடம்
காயா மலர்வண்ணன்
பேயார் முலையுண்ட
வாயான் மாதவனே. (10 ப 5 தி 6.)

45. திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என்தலையே
திருமால் வைகுந்தமே தண்திருவேங்கடமே எனதுடலே
அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே
ஒருமா நொடியும் பிரியான் என் ஊழிமுதல்வன் ஒருவனே.

(10 ப 7 தி 8.)

46. காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில் இந்நாள்
பாண்குன்ற நாடர் பயில்கின்றன இதெல்லாம் அறிந்தோம்
மாண்குன்ற மேந்தி தண்மாமலை வேங்கடத்து உம்பர் நம்பும்
சேண்குன்றம் சென்று பொருள்படைப்பான் கற்ற திண்ணை
[னவே.

(இயற்பா திருவிருத்தம் 8.)

47. மாயோன் வடதிருவேங்கடநாட வல்லிக்கொடிகாள் !
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர் உரையீர் நுமது
வாயோ ? அதுவன்றி வல்வினையேனும் கிளியுமெள்கும்
ஆயோ ? அடும் தொண்டையோ ? அறையோ ! இதறிவரிதே

(ஷ 10.)

48. கயலோ நுமகண்கள் ? என்றுகளிறு வினவி நிற்றீர்
அயலோரறியிலும் ஈதென்னவார்த்தை ? கடல் கவர்ந்த
புயலோடுலாங் கொண்டல்வண்ணன் புனவேங்கடத்தெம்
[மொடும்
பயலோவிலீர் கொலைக்காக்கின்ற நாளும் பலபலவே.
(ஷை 15.)

49. இசைமின்கள் தூதென்று இசைத்தால் இசையிலம் என்கலை
[மேல்
அசைமின்களென்றால் அசையுங்கொலாம் ? அம்பொன்
[மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங்கடத்தவன் தாள்சிமய
மிசைமின் மிளிரிய போவான் வழிக்கொண்டே மேகங்களே.
(ஷை 31.)

50. ஒண்ணுதல்லாமை யொளிபயவாமை விரைந்துநந்தேர்
நண்ணுதல்வேண்டும் வலவ ! கடாகின்றுதேன் நவின்ற
விண்முதல் நாயகன் நீள்முடி வென் முத்தவாசிகைத்தாய்
மண்முதல் சேர்வுற்று அருவிசெய்யாநிற்கும் மாமலைக்கே.
(ஷை 50.)

51. முலையோமுழுமுற்றும் போந்தில மொய்பூங்குழல்குறிய
கலையோ அரையில்லை நாவோகுழறும் கடல்மண்ணெல்லாம்
விலையோவென மிளிரும்கண் இவள்பரமே ? பெருமான்
மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே.
(ஷை 60.)

52. காவியும் நீலமும் வேலும் கயலும் பல பல வென்று
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு அசுரைச்செற்ற
மாவியம் புள்வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம்சேர்
தூவியம் பேடையன்னாள் கண்களாயது துணைமலரே.
(ஷை 67.)

53. உறுகின்ற கன்மங்கள் மேலென ஓர்ப்பிலராய் இவளைப்
பெறுகின்ற தாயார் மெய்ந்நொந்து பெறார்கொல் ? துழாய்
[குழல்வாய்த்
துறுகின்றிலர்தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர்
இறுகின்றதால் இவளாகம் மெல்லாவி யெரிகொள்ளவே.
(ஷை 81.)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.